**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP 143/2023**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18 ஆம் நாள் வியாழன்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | டி. குருமூர்த்தி | த/பெ.: | திருநாவுக்கரசு |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 44 | முகவரி: | 14/4, பழைய எடத்தெரு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 17.08.2023

**ம.சா.1ன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 28.04.2018 | முதல் தகவல் அறிக்கை - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 24.04.2018 | இன்சூரன்ஸ் பாலிசி - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 28.04.2018 | ஏ.ஆர். காப்பி - அச்சு நகல் |
| ம.சா.ஆ.4 | 21.08.2003 | ஒட்டுநர் உரிமம் - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | | மருத்துவ பில்கள் (ரூ. 2432/-) - உண்மை நகல் |
| ம.சா.ஆ.6 | | மருத்துவ குறிப்பேடு - உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | | M.V. Report - நகல் |

**<u>2 ம்எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

எனது வயது, வருமானம், தொழில் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இநத வாகனத்தால் எந்த கொடுங்காயம் ஏற்படவில்லை என்றால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 6 ன்படி எனக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவரால் குறிப்பிடப்படவில்லை . தலையில் தையல் போட்டதால் கொடுங்காயம் என்று எடுத்துக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. அதனால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்று சொன்னால் சரியல்ல. தலையில் ஏற்பட்ட தையலை வைத்து ரூ.5 இலட்சம் கேட்பது சட்டப்படி நிலைத்து நிற்கதக்கதல்ல. இந்த விபத்து வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது செந்தில்குமார். முதல் தகவல் அறிக்கையின்படி வாகனத்தில் 19 பேர் பயணம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். கேபிள் டிவி ஆப்ரேட்டர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றோம் என்றால் சரிதான். நானும் அந்த கேபிள் டிவி உரிமையாளர் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். ஆனால் அதற்கான உறுப்பினர் அட்டையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கேபிள் டிவி ஆப்ரேட்டர் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். எனக்கு எந்தவித இயலாமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக எனது இயலாமையை மிகைப்படுத்தி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனம் 12 பேர் பயணம் செய்யக்கூடிய இருக்கை வசதி உள்ளது என்றால் சரியல்ல. அந்த வாகனமானது 21 பேர் பயணம் செய்யலாம். நான் பயணித்த வாகனத்தின் பதிவு எண் ஞாபகம் இல்லை. வண்டி வாகன உரிமையாளர் பெயர் சாகுல்ஹமீது என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநரும் சாகுல்ஹமீதுதான். அவர் உரிமையாளர் மற்றும் ஓட்டுநராக இருந்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 ஆவணத்தில் 12 மட்டுமே காப்பீடு செய்து பயணிக்கலாம் என்றுள்ளது. அதனால் இந்த இழப்பீடு கோருவதற்காக 21 பேர் பயணம் செய்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் தலை, நெஞ்சு, தோள்பட்டை கழுத்து, உடல் முழுவதும் காயம் இருப்பதாக சொல்லி இருக்கிறேன். எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அரசு மருத்துவமனையிலேயே பூரண குணமடைந்து விட்டது என்றால் சரியல்ல. தற்போது இயலாமை என்பது வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவில் கோரியுள்ள செலவினங்களை காண்பிப்பதற்கு ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாகனத்தை ஓட்டிச்சென்ற பாதையானது கொண்டை ஊசி கொண்ட வளைவு பாதை ஆகும். கொண்டை ஊசி வளைவு கொண்ட பாதையில் வேகமாக ஓட்டமுடியாது என்று சொன்னால் சரிதான். நான் பயணம் செய்த வாகனத்தில் பயணிகள் அமர்ந்து செல்லும் இருக்கைக்கு எதிராக அதிக பயணிகளை ஏற்றிக்கொண்டு வாகனத்தில் பயணித்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மொத்தம் 19 பேர் பயணம் செய்ததால் பாதிக்கப்பட்ட 19 பேர்களுக்கும் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று

சொன்னால் சரியல்ல. காப்பீடு நிறுவனத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**(1ம் எதிர்மனுதாரரோ அவரது வழக்கறிஞர் ஆஜாராகததால் 1ம் எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்படுகிறார்)**

ஒம்... கே. சக்திவேல்,

சார்பு நீதிபதி,

திருத்துறைப்பூண்டி. (மு.கூ.பொ)